**தலைப்பு 295 - வாணிப திணைக்களம்**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 1.1 அபிப்பிராயம்

------------------

வாணிப திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் வாணிப திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உறுப்புரையின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாணிப திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

--------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவீன முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 (II) பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக காணப்படினும் அவ்வாறு செயற்படாத காரணத்தினால் 03 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 60 சதவீதம் தொடக்கம் 88 சதவீதம் வரையான வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 976,961 ஆன நிதியேற்பாடு குறைவாக பயன்படுத்தப்பட்டது. | வெளிநாட்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், வியாபார கலந்துரையாடல்கள் மாநாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட்-19 பரவல் காரணமாக நிறுத்தப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது செலவீன விடயங்களில் சேமிப்பிருந்தது. அதற்கிணங்க, சம்பளத்துடன் செலுத்தப்பட்ட போக்குவரத்துப் படிகளை உரிமை கோராமையால் போக்குவரத்து செலவீன உருப்படிகளில் சேமிப்பிருந்தது. | மதிப்பீடுகள் இயலுமான விதத்தில் முழுமையாக சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதிப்பிரமாணம் 1647 (உ) | நிதிப் பிரமாணங்கின் பிரகாரம் வாகனப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிறகான வாகனப் பதிவேடு தயாரிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களிற் கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்வரும் படிவங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br>• குறிப்பு (i) நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள் கூற்று<br>•குறிப்பு (ii) புத்தகங்களிலிருந்து பதிவழித்தவைக்கான கூற்று<br>சிகாஸ் கணனி முறைமையால் பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டதுடன் சிகாஸ் தள பிரயோக முறைமையால் இறுதி திறைசேரி கணக்குகூற்றுக்கள் பெறப்பட்டது. | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள் மற்றும் 02 பதிவழிப்புப் படிவங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு குறிக்கப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டிருந்தது. எதிர்கால்த்தில இது போன்ற தவறுகள் நடைபெறுவதை தவிர்ப்பதற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பரீட்சை மீதி (சிகாஸ் முறைமை மூலம் தயாரிக்கப்பட்டது) மற்றும் இறுதி திறைசேரி க் கூற்றுக்களை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு மேலும் குறிப்பிடப்பட்டது. | சுற்றறிக்கைகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை யின் 3.1.6 ஆம் பந்தி | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டு பொருள் மெய்மையாய்வு சபை நடாத்தி அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2022 மார்ச் 17 இற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதும் அறிக்கைகள் 2022 மே 10 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டு பொருள் மெய்மையாய்வு சபை நடாத்தப்பட்டிருந்த போதிலும் அதன் நடவடிக்கையில் ஏற்பட்ட காலதாமதத்தால் அறிக்கைகள் குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்கப்பட முடிந்திருக்கவில்லை. | சுற்றறிக்கைககளிற்கி ணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை. | 07 வாகனங்கள் ஓடக்கூடிய நிலையில் இருந்தபோதிலும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 04 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிரு க்கவில்லை. | போக்குவரத்து உத்தியோகத்தரை இடமாற்றத்தில் போனபோதிலும் தொடர்ந்து ஒரு உத்தியோகத்தரை நியமிக்காமையால் 2021 ஆம் ஆண்டில் எரிபொருள் பரீட்சிப்பு நடாத்துவதில் காலதாமதமிருந்தது. இந்த நடவடிக்கையை 2022 ஆம் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | சுற்றறிக்கைககளிற்கி ணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(உ)** | 2006 அரச பெறுகை வழிகாட்டி 2.8.1 (ஆ) | திணைக்களத்தால் கட்டியெழுப்பப்பட்ட கட்டிடத்தினை பிரிவுபடுத்துவதற்கா ன ரூபா 10,751,459 பெறுமதியான ஒப்பந்தம் தொடர்பில் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது உரிய விடயம் தொடர்பிலான நிபுணரொருவரையும் பெறுகை நடவடிக்கை தொடர்பில் போதிய அறிவை உடைய ஒருவரையும் உள்ளடக்கியிருக்க | ஒப்பந்தம் தொரடர்பிலான விடயங்களிற்காக வரிசை அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது ஆலோசனையை மேற்கொண்டது. அதற்கிணங்க, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது அளவுகள் மற்றும் மதிப்பீட்டுக்களின் தயாரித்தல், விலைமனுக்கு முன்னரான | பெறுகை வழிகாட்டிகளின் அறிவுறுத்தலிற்கிணங் க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வேண்டியபோதும் இக்குழுவானது வர்த்தக இயக்குனரொருவரையும் இரண்டு உதவி வர்த்தக இயக்குனர்களையும் கொண்டிருந்தது. | பங்குபற்றலிற்காக, அறிவுரை வழங்குவதற்காக, சந்தைப் பெறுமதியுடன் மேலதிக விலைகளுக்காக வழங்கப்பட்ட விலைகளை ஒப்பிடுதல் மற்றும் அறிக்கைகளை வழங்குவதற்காகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தரை தொடர்பு கொள்ளப்பட்டது என குறிப்பிடப்பட்டது. |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதியாக திணைக்கள புத்தகங்களில் காணப்படுகின்ற மீதி மற்றும் திறைச்சேரி கணினி அச்சு மீதியின் இடையில் ரூபா 278,944 ஆன வேறுபாடொன்ற அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடானது 15 வருடங்களிற்கு மேலாகவிருந்தது. | 2006 ஆம் ஆண்டில் இணக்கக் கணக்கில் கண்டுபிடிக்கப்பட்ட கணக்கீட்டு வழுக்கள் திருத்தப்பட்டிருந்ததுடன் தற்போதுள்ள வித்தியாசத்தை கண்டுபிடிப்பதற்கான முன்னைய ஆண்டுகளிற்கான கணக்குகளின் இணக்கம் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் அத்தகைய நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் தொடர்பான பின்வரும் ஆண்டுகளின் கணக்குகளைத் திருத்துவதற்கு ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டது. | திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் திணைக்களப்புத்தகங்களிற்கிடையிலுள்ள வித்தியாசத்தை ஒப்பீடு செய்து தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 60,319 ஆன இடர் கடன் மீதிகளுக்கு தொடர்பாக எந்தவொரு அறவிடல்களும் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சிங்கப்பூர் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட ஒருவர் மற்றும் பிரேசில், ரேக்கி, மற்றும் பாங்கொக் உயர்ஸ்தானிகர் அலுவலகங்களில் இணைக்கப்பட்ட 03 உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து கழித்து சேகரிக்கப்பட்ட கடன் தவணைப்பணங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வாணிப திணைக்களத்திற்கு செலவு வைக்கப்படாமையினால் உரிய செலவு மீதியினை நாளதுவரையாக்க முடிந்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதிகளை முறையாக அறவிடுவதற்கும் அறவிடப்பட்ட கடன் தவணைப்பணங்களை சரியாக பதிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | திணைக்களமானது இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தகவல்கள், வரி வீதங்கள் மற்றும் ஏனைய உரிய தகவல்களை உலக வர்த்தக மையத்தின் ஒருங்கிணைந்த தரவு முறைமையுடன் நாளதுவரையாக்க வேண்டிய போதும் 2017 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்த வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உலக பொருளாதார மையத்தால் வேண்டப்பட்ட படிவங்களில் உரிய தரவுகளை வழங்குவதற்கு 2019 யூன் 04 இல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இலங்கை சுங்கம் இணங்கியது. இருந்த போதிலும், இலங்கை சுங்கம் வேண்டப்பட்ட படிவத்தில் உரிய தகவல்களை வழங்க தவறியது. இந்த நிலைமையானது தரவு முறைமையை நாளதுவரையாக்கலில் இடைவெளியை உருவாக்கியது. | தகவல்களை நாளதுவரையாக்குவதற்குரிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | இலங்கையில் விவசாயப் பொருட்கள் மீதான இறக்குமதி வரி 50 வருடங்களுக்கு முன்னதாகவிருந்து 50 சதவீதமாகவுள்ளதுடன் இது விசேட பாதுகாப்பு பொறிமுறையை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவாகவுள்ளதுடன் உலக வியாபார அமைப்புடன் நடந்த கலந்துரையாடலில் செயன்முன்னேற்றத்தை அடைவது இலகுவானதாகவில்லை. | இலங்கை உட்பட பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் (ஜீ 33 நாடுகள்) இந்த விசேட பாதுகாப்பு பொறிமுறையை கோருகின்றது. இருந்தபோதிலும், பல அபிவிருத்தியடைந்த நாடுகள் தொடர்ச்சியாக இதற்கு எதிராகவுள்ளது. இதற்கான காரணம் உலக வியாபார அமைப்பின் அனைத்து உறுப்பினர் நாடுகளின் (தற்போது 164) அனுமதியும் பெறப்பட வேண்டும். ஆகையால், இந்தப் பேச்சுவார்த்தையின் செயன்முன்னேற்றத்தை தனியான நாடாக அடைதலானது எங்களுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ளது. | விசேட பாதுகாப்பு பொறிமுறைமைக்கான அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | சர்வதேச வியாபாரத்திலுள்ள தற்போதைய அபிவிருத்தி சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை இனங்காண்பதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு 14 ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கு இலக்குகளை நிர்ணயித்திருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் நான்கு வேலைகள் மாத்திரம் பூர்த்தியடைந்திருந்தது. | கருத்துரைகள் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| புகைப் பரீட்சை மேற்கொள்ளாமையால் திணைக்களத்திற்குச் சொந்தமான காரொன்று 2019 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்ததுடன் அந்தச் சொத்துக்கள் மீது மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புகைப் பரீட்சை மேற்கொள்ளாமையால் செயற்படக்கூடிய வாகனங்கள் விளைவற்றிருந்தது. போதியளவு பணமில்லாமையால், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய வாகனம் திருத்தப்பட வேண்டுமென்பதுடன் பாவனைக்குட்படுத்த வேண்டும். |

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளின் வினைத்திறனைான செயலாற்றலிற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 3,584,470 ஐ ஈடுபடுத்தி ஈ-கியூ முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இந்த முறைமை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அகற்றப்பட்டிருந்தது. | கொவிட் வைரஸ் பரவலினை எதிர்கொள்வதற்காக ஜேர்மன் அரசாங்கத்தின் உதவியுடன் இணையத்தளத்தில் மூலச்சான்றிதழினை வழங்கும் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் முதல் கட்டம் 2022 யூன் இல் தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் இலத்திரனியல் கியூ முகாமைத்துவ முறைமை மீண்டும் தேவையில்லை. | பொதுப்பணமானது தேவைப்பாடுகளை சரியாக இனங்காண்பதன் மூலம் பொருளாதார ரீதியிலும் வினைத்திறனான ரீதியிலும் செலவழிக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **உள்ளகக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கணக்காய்வாளரை நியமித்தல்** | | |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (1) உறுப்புரை மற்றும் 40 (2) (1) உறுப்புரை பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அவ் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு வரையிலும் உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வி பதவியொன்று அங்கீகரித்து கொடுக்கமாறு கோரப்பட்டு நிதிப் பிரமாணம் 71 பிரகாரம் விண்ணப்பப்படிவமொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்க கொள்கை தீர்மானத்தின் அடிப்படையில் திணைக்களமானது வெவ்வேறு அமைச்சின் கீழ் உள்வாங்கப்படுவதால் அதற்கான அனுமதியைப் பெறல் தாமதமடைந்து வருகின்றது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இருக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 151 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 115 ஆக இருந்தமையால் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 36 ஆகவிருந்தது. அத்தகைய வெற்றிடங்களில், 10 அங்கீகரிக்கப்பட்ட பதவியிலுள்ள விசேட மற்றும் தரம் ஒன்றிலுள்ள மற்றும் வாணிப திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகப் பதவிகளை உள்ளடக்கிய இரண்டு அதிகூடிய நிறைவேற்று மட்டத்திலுள்ள 03 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தது. | வாணிப திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்கான அமைச்சரவை அனுமதி இன்று வரை கொடுக்கப்பட்டிருக்காததும் தற்போது வேலை செய்கின்ற நான்கு அதிகூடிய சேவைமூப்பு உத்தியோகத்தர்கள் மேலதிக பணிப்பாளர் நாயகப்பதவிக்கான தகுதியற்றவராகவுள்ளனர். அதைப்போல வாணிப திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்காக தகுதியுள்ள உத்தியோகத்தரை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | தேவையான பதவிகளை சரியாக இனங்காண்பதற்கும் உரிய அனுமதியுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |